# பெப்ரவரி - 28 - செவ்வாய்

**புனித கொர்த்தோனா மார்கரீத்**
**அப்போது பேதுரு அவரிடம், பாரும், நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே' என்று சென்னார். மாற். 10:28**

-------------------------------------------------------------------

## முதல் வாசகம்: சீராக்கின் ஞானம் 35:1 - 12

கட்டளையைக் காப்பாற்றுகிறவன் காணிக்கையைப் பெருகச் செய்கிறான். கட்டளைகளைக் கவனிப்பதும், எல்லா அக்கிரமத்தினின்றும் அகல்வதும் பயனுள்ள பலியாகும்.அநீதத்தை விட்டகன்று போவது பொறுத்தலை மன்றாடும் பலியாகவும், பாவங்களுக்கு மன்னிப்பாகவும் இருக்கின்றது.மாவுக் காணிக்கை கொடுக்கிறவன் நன்றியறிந்த வணக்கம் செய்கின்றான். இரக்கம் காண்பிக்கிறவன் பலி ஒப்புக்கொடுக்கிறான். அக்கிரமத்தினின்று அகன்று போவது ஆண்டவருக்கு விருப்பமானது. அநீதத்தினின்று விலகுவது பாவ நிவாரணம். அப்பொழுது நீ ஆண்டவருடைய முன்னிலையில் வெறுங்கையனாய்க் காணப்படமாட்டாய். இவைகளெல்லாம் கடவுள் கட்டளையைப் பற்றிச் செய்யப்படுகின்றன. நீதிமானுடைய காணிக்கை பலிபீடத்தைச்
செழிப்பிக்கின்றது. உன்னத கடவுள் திருமுன் இனிய மணமாய் இருக்கின்றது. நீதிமானுடைய பலி விருப்பமாய் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. ஆண்டவர் அவனை மறந்துவிட மாட்டார். நல்ல மனத்தோடு கடவுளுக்கு வணக்கம் செலுத்து. உன் கைகளின் முதற் காணிக்கைகளைக் குறைக்காதே. ஈகையிலெல்லாம் மகிழ்ந்த முகம் காண்பி உன் பத்திலொரு பாகங்களை மகிழ்ச்சியாய்க் காணிக்கை கொடு.உன்னத கடவுள் கொடுத்திருப்பதற்குத் தக்க வண்ணம் நீயும் அவருக்குக் கொடு. நல்ல முகத்தோடு உன் கைகளில் உள்ளதைக் கொடு.

**பதில்பாடல்:** தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளின் மீட்பைக் கண்டடைவர்

## நற்செய்தி: மாற்கு 10: 28 – 31

அப்பொழுது இராயப்பர் அவரிடம், ”இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோமே” என்று சொன்னார். அதற்கு இயேசு, ”தன் வீட்டையோ, சகோதரர் சகோதரிகளையோ, தாய் தந்தையரையோ, மக்களையோ, நிலபுலங்களையோ என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறந்துவிடும் எவனும்,இம்மையில் இன்னல்களோடு கூட, வீடு, சகோதரர், சகோதரி, தாய், பிள்ளை, நிலபுலங்களை நூறு மடங்காகவும், மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். முதலானோர் பலர் கடைசியாவர், கடைசியானோர் பலர் முதலாவர்” என்றார்.

**தியானம் :** இன்று மனித உறவுகள் வியாபார மயமாகிவிட்டது. இலாப நோக்கு இல்லாமல் ஒருவர் மற்றவரோடு பழகுவதில்லை. உறவுகள் தொடங்கி உணர்வுகள் வரை எனக்கு என்ன கிடைக்கும்? என்ற சுயநல இலாப நோக்கங்களுடன்தான் மனிதன் உறவு கொண்டிருக்கின்றான். நான் உனக்கு இதைச் செய்தால் எனக்கு இதனால் என்ன பலன் கிடைக்கும் என்ற வியாபார நோக்கத்தோடுதான் ஒரு மனிதன் பிற மனிதனுக்கு உதவிகள் செய்கின்றான், உறவு கொள்கின்றான். இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகத்தில் பேதுரு ஆண்டவர் இயேசுவிடம் முறையிடுகின்றார். பாரும் நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றினோம் எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று மறைமுகமாக கேள்வி எழுப்புகின்றார். அதற்கு இயேசு கூறுகிறார், எவரொருவர் இறையாட்சிக்காக தனக்குள்ள அனைத்தையும் இழக்கிறாரோ அப்போது அவர்களுக்கு இவ்வுலகத் தேவைகள் முழுமையாக நிறைவுசெய்யப்படுவதுடன் நிலைவாழ்வையும் அவர்கள் பெற்றுக் கொள்வர் என்று உறுதி கூறுகின்றார். “அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்.'' (மத்.6:33) அதே வேளையில் நாம் நம்மை இழக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் ஏனெனில் “கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். தமக்கென்று வாழ்வோா் தம் வாழ்வையே இழந்துவிடுவர். இவ்வுலகிலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்.'' (யோவா.12:24-25) என்ற இயேசுவின் பொன்மொழிக்கு ஏற்ப நம்மை நாம் இழப்போம் கடவுளின் ஆட்சிக்கு நம்மைத் தகுதியானவர்களாக்கிக் கொள்வோம்.